# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1469/32 - 2006 නොවැම්බර් 02 වැනි බ්‍රහස්පතින්දා - 2006.11.02

1469/32 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**தென் மாகாண மாகாண சபை**

*1990 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, நிதி நியதிச் சட்டம்*

**7 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

தென் மாகாணத்தின் மாகாண சபையின் 1990 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க நிதி நியதிச் சட்டத்தின் 7 (1) ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள, அதிகாரங்களின் பிரகாரம் தென் மாகாண சபையின் முதலமைச்சரும் நிதியமைச்சருமாகிய குஸ்டின்னா வடு சான் விஜயலால் த சில்வா ஆகிய நான், கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள விற்பனை வரியை இவ்வுத்தரவின் மூலம் 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி நள்ளிரவு/01.11.2006 ஆந் திகதி முதல் அமுலாகும் வண்ணம் உத்தரவிடுகிறேன்.

(அ) சாராயம் (பதப்படுத்தப்பட்ட சாராயம் கலக்கப்பட்ட சாராயம் உட்பட) பியர், வைன், கள்ளு மற்றும் வேறு இறக்குமதி செய்யப்பட்ட அல்லது இந்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மதுபான வகைகள் கொள்வனவு செய்யப்பட்டு விற்பனை செய்யும் வியாபாரம் சம்பந்தமாக — நூற்றுக்கு 2

(ஆ) சிகரட் உற்பத்தியாளரிடமிருந்து அல்லது சிகரட் இறக்குமதியாளரிடமிருந்து அல்லது கொள்வனவு செய்து சிகரட் விற்பனை செய்யும் வியாபாரத்தின் விற்பனை சம்பந்தமாக. — நூற்றுக்கு 2

2. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1991, சனவரி 12 ஆந் திகதியும் 644/29 ஆம் இலக்கமும் கொண்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட உத்தரவில் 1 ஆவது பிரிவினால் ஆக்கப்பட்ட 1% வரி அளவை மேலே (அ), (ஆ) பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள வியாபாரங்களின் விற்பனை சம்பந்தமாக மாத்திரம் 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி நள்ளிரவில் /2006.11.01 ஆந் திகதி முதல் இவ்வுத்தரவு அமுல்படுத்தப்பட்டதன் பின் ஏற்படும் ஏதாவது வியாபார விற்பனை வரியொன்று சம்பந்தப்பட்ட ஏற்புடைமைகள் இல்லாதொழிதல் வேண்டும்.

குஸ்டின்னா வடு சான் விஜயலால் த சில்வா,
முதலமைச்சரும் நிதி அமைச்சரும்.

தென் மாகாணத்தின் மாகாண சபையின்
முதல் அமைச்சர் காரியாலயம்,
காலி,
2006, ஒற்றோபர் 25.

*11- 422*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.